






கொழும்பு வெள்ளவத்தை

மயூரபதி

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
# கீர்த்தனா மலர்


"ஆக்கியோன்"

கே. கே. கிருஷ்ணபிள்ளை

ஓய்வு பெற்ற இசை ஆசிரியர்

# சமர்ப்பணம்

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதியில் குடிகொண்டுன்னை நாடி வரும் அடியார்களின் வினை தீர்த்து அருள் சுரக்கும் அன்னையே, ஆதிபராசக்தி, காளிமகாதேவியின் பெயர்கள் எண்ணிறைந்தவை அவைகளுள் மிகவும் அற்புதம் வாய்ந்தது **காளி** என்பதாம் . கோடானுகோடி கற்பங்கள் அடங்கப் பெற்ற காலத்தையே அவள் எடுத்து விழுங்கித் தன்னகத்து அடக்குகின்றமையால் **காளி** என்று அழைக்கப்படுகிறாள்,

அவளே கால சொரூபிணியாக இருந்து கொண்டு ஆடல்புரிந்து, அண்டங்களையெல்லாம் ஆட்டிப்படைக்கிறாள். மொழிக்கும், நினைவுக்கும் எட்டாதவளும், மால், அயன்தேட, வானவர் தேடவும் வெளிப்படாது நின்றவளும், ஆன அன்னை தன் அடியார் தவறுகள் செய்யினும், பொறுத்தருளி வந்து காப்பாற்றுவாள்.

**"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்"** என்பது திருவருட்பயன் தன்னை வழிபடும் அடியார்களைத் தூய்மைப்படுத்திச் சிவத்தோடு சேர்த்துப்பரகதியடையச் செய்வது அம்மாவின் இயல்பு.

சொற்களால் அளவிட்டுக்கூற இயலாத அன்னையின் திரு நாமங்களைக் குறித்து சில பாடல்களை இயற்றியுள்ளேன் அவைகளை அன்னையின் அடிமலரினைகளிற் சமர்ப்பணம் செய்கிறேன்.



**கே. கே. கிருஷ்ணபிள்ளை**
ஆசிரியர்

ஓம்
சிவசக்தி

# "ஆசியுரை"

அம்பிகையின் அழகுக் கோயில்கள் இத்தீவின் எங்கணும் உண்டு. அம்பிகையின் தரிசனத்தில் அருள் மழையில் நனைந்து ஆறுதல் கண்ட அடியவர்கள் கோடி கோடி. அன்னை அன்பு வடிவத்தில் அருள் தரு நாமங்களில் தம் மனம் இழந்த புலவர்கள், பாவலர்கள், பக்தர்கள், அடியவர்கள் ஏராளம் ஏராளம்.

**"எங்கெங்கு காணினும் சக்தியடா - அவள்**
**ஏழுகடல் வண்ணமடா"**

எனப் பாடி சக்தியின் வடிவை எங்கெங்கல்லாம் காணுகிறார்.

மயூரபதி என்பது மயூரம் + பதி என்றாகும். மயூரம் என்பது "மயில்" பறவையைக் குறிக்கும். பதி என்பது நகரை, ஊரைக் குறிக்கும். எனவே இஃது "மயில் பதி" = மயூரபதி என்றாகிறது. அழகு ஊர், சீகர், சிறப்பூர், தெய்வநலம் பெற்ற ஊர் என்னும் பொருள் பொதிந்து நிற்கின்றது. இதனால் இங்கு வாழ் அன்னையின் சிறப்பும் சீர்மையும் எத்தனை பெருமை வாய்ந்தது என்பதும் தெளிவாகிறது.

திரு. கே. கே. கிருஷ்ணபிள்ளை அவர்கள் இறைவனிடத்தே அசையாத பக்தியுடையவர். இசைவடிவால் இறைவனைப் பாடி மகிழ்பவர். செல்வச்சந்நிதி முருகன் மேல் அவர் பாடிய பக்திரசம் கனிந்த கீர்த்தனா மலர்கள் படிப்பவர் உள்ளத்தில் பதிந்து அவர்களைச் செல்வச் சந்நிதி முருகனிடத்து இழுத்துச் செல்கிறது. அவன் அருள்வாரியில் முழுக வைக்கின்றது. அப்பாடல்கள் போன்று அன்னை பராசக்தியிடத்து அருள் காளியம்மாள் இடத்தும் அவர் அகமுருகிப் பாடிய பாடல்கள்

அழைத்துச் செல்கின்றது. மயூரபதி அம்மனை மனதில் இருத்தச் செய்கிறது. அவர் மயூரபதி அம்பாளை வணங்கிப் பாடி வேண்டும் வரங்களைக் கேட்கிறார். இதோ நாமும் அதைக் கேட்போம்.

**"செந்தமிழ் பாமாலை சூடி உன் பாதத்தை**
**நைந்து நைந்து உருகிப் பாடிட வேண்டும்**
**எந்நேரமும் என் சிந்தையும் நாவுமுன்**
**திருப் பெயர்ப் புகழ் மறவாமையும் வேண்டும்."**

என்கிறார்.

பிறவியின் பயன் மனமாயை வென்று, அகற்றி இறைவழி நிற்றலே. அதற்கான வழியை அறியத்தருபவள் அன்னை சக்தியே. இதனால்தான் இசையறிஞர்

**"மயூரபதியைக் கண்டேன் - மன**
**மாயைகளை வென்றேன்.**

எனப்பாடுகிறார்.

மயூரபதி மகாகாளியை வணங்கியதனால், பாடியதனால் தான் பெற்ற பயனையும், வணங்கச் செல்வோரை பயன்பெற மயூரபதிக்கான ஆற்றுப்படையையும் காட்டுகின்றார்.

அன்னை, நவராத்திரி அணங்காய் நிற்பவள். சிங்கத்தில் செந்தாமரையில் வெண்தாமரையில் வீற்றிருந்து அருள்பவள். இசைப் பேரறிஞர், அன்னையை


**"சிங்கத்தின் மீதிருப்பாள்**
**தீவினைகள் தீர்த்திடவே**
**செங்கமல மீதிருப்பாள்**
**செல்வ மெல்லாம் தந்திடவே**
**வெண்கமல மீதிருப்பாள்**
**மேவுகலை தந்திடவே"** என

மயூரபதிஉறைபவளே, ஓம் சிவசக்தி என்னும் இசைக் கீர்த்தனாவில் பாடித்தருவது, உடலை, உயிரை உணர்வை, உள்ளத்தைத் துள்ள வைக்கிறது. கண்களைக் கசிந்துருக வைக்கின்றது கனிய வைக்கின்றது. காலனையும் வெல்ல வைக்கின்றது எனலாம்.

அன்னையின் நாமங்களை, அருட்பெயர்களை, அருள் வெள்ளத்தை அன்பை வியந்துபாடி **"வேண்டும் வரமெல்லாம் தந்திடுவாள் மயூரபதி அம்பாள் விரையுங்கள் அடியவரே"** எனக் கூறிக் குதூகலிக்கிறார்.

இப்பாடல்கள் நாற் திசையும் பரவ வேண்டும். நல்லவர்கள் நாவால் போற்ற வேண்டும். நாடிவரும் அடியவர்கள் பவவினைகள், பலவினைகள் தீர்க்கும் அன்னை நாமம் நாவில் நிலைக்க வேண்டும். நல்வினைகள் மலரவேண்டும். நல்லிசைப். பேராளர்கள் மேடையில் இக்கீர்த்தனங்களை இசைக்கவேண்டும். இசைபயில்வோர் அசைபோட்டுப் பயில வேண்டும். யாவரும் பாடி மகிழ வேண்டும். இன்பம் பெற வேண்டும். என நல்லாசிகள் கூறுகின்றேன். அம்பாளின் அருள் பெற்று உய்ய வேண்டும் என வேண்டுகின்றேன்.

ஆசிரியரின் நற்பணி மேன்மேலும் வளர வேண்டும். அவர் இறைபணி உய்யவேண்டும். அவர் வாழ வேண்டும். என அம்பிகையின் அருள் வேண்டி வணங்குகிறேன்.



அம்பாள் அடியவன்
பொன். வல்லிபுரம். ஜே.பி.
தர்மகர்த்தா

மயூரபதி பத்திரகாளி

அம்மன் தேவஸ்தானம்
கொழும்பு - 06.

சிவகணபதி துணை

# "மயூரபதியிலமர்ந்த முன்னவனே"

ராகம் - லதாங்கி தாளம் - ஆதி

## பல்லவி

மயூரபதியிலமர்ந்த முன்னவனே - ஆதி
மூலப்பொருளே நீ வந்தருள்புரிவாய்

(மயூர .....)

## அனுபல்லவி

தயைநிறைந்த ஸ்ரீ விக்னராஜா
தாள்பணிந்தோம் வெற்றி அருளும் கணேசா

(மயூர .....)

## சரணம்

கௌரீ நந்தன கஜமுகவரதா
கஜானனா ஓம் கஜவதனா
சரணம் சரணம் சக்தி சொரூபா
சாமரகர்ணா சண்முகசோதரா

(மயூர .....)

*****

# "மங்கள ரூபினி மதியணி சூலினி"

ராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

பல்லவி

மங்கள ரூபினி மதியணி சூலினி
மயூரபதியில் என்றும் மருவும் பத்ரகாளி
(மங்கள.....)

அனுபல்லவி

எங்கும் நிறைந்தவளே ஏகாந்தநாயகி
சங்கராபரணனின் பங்கில் உறையும் ஜெய
(மங்கள.....)

சரணம்

ஜெய ஜெய ஸ்ரீதேவி ஜெய ஜெய துர்க்கா
ஜெய ஜெய ஜெயந்தி ஸ்ரீபரமேஸ்வரி
சிங்க வாகனி சிதம்பர நடேஸ்வரி
எம்குலம்தளைத்திட வந்தருள் செய் அம்மா
(மங்கள.....)

*****

# "இன்னமும் பாரா முகம் ஏனம்மா"

ராகம் - வாஸஸ்பதி தாளம் - ஆதி

## பல்லவி

இன்னமும் பாரா முகம் ஏனம்மா – இந்த
ஏழையின் துயர் தீரம்மா பத்ரகாளி

(இன்ன.....)

## அனுபல்லவி

மன்னுமயூரபதியில் வாழும் மகாராணி
அன்னபூரணி அகிலாண்டநாயகி

(இன்ன.....)

## சரணம்

செந்தமிழ்ப்பாமாலை சூடி உன்பாதத்தை
நைந்து நைந்துருகிப் பாடிட வேண்டும்
எந்நேரமும் என் சிந்தையும் நாவுமுன்
திருப்பெயர்புகழ் மறவாமையும் வேண்டும்
கருணாகடாட்சி காசிவிசாலாட்சி
கைதொழுவார்க்கிரங்கும் கற்பகக் காமினி

(இன்ன.....)

*****

# "ஸ்ரீமயூரபதியில் வாழும் தாயே"

ராகம் - ஸாமா　　　　　　　　　　　　　　தாளம் - ரூபகம்

பல்லவி

ஸ்ரீமயூரபதியில் வாழும் தாயே
பத்ரகாளி நீயே

(ஸ்ரீமயூர .....)

அனுபல்லவி

ஸ்ரீராகவன் சோதரி - என்
தீவினை தீர்த் தாட்கொள் அம்மா

(ஸ்ரீமயூர .....)

சரணம்

பாமாலைபுனைந் தேத்தி உன்
பாதமலரைப் புகழ்ந்து நாளும்
நாவாரப் பாடிப் பணியும்
நற்பணி தந்தருள்வாய் அம்மா

(ஸ்ரீமயூர .....)

*****

# "இன்னும் ஏனோ அம்மா"

ராகம் - மோஹனம் தாளம் - ஆதி

## பல்லவி

இன்னும் ஏனோ அம்மா
இரங்கிடாததேன் கண்பார்

(இன்னு.....)

## அனுபல்லவி

மன்னுமயூரபதியில் மேவுமெங்கள் பத்ரகாளி
உன்மனம்தான் கல்லோ இரும்போ பெரும் பாறையோ

## மத்திமகாலம்

பாரினில் உனை அண்டினோர்கள் இழிவுபடப்
பார்த்திருப்பதுதான் உன்செயலா
நீயலால் வேறு யாரெனைக் காப்பார்
இனியும் திருவுள மிரங்காதா
உன்புகழ் பாடும் பணியே போதும்
வேறெதையும் நான் கேட்கவில்லை
தாமதம் வேண்டாம் தாயே உன்னிரு
தாழ்களையென்றும் தாவிப்பிடித்தேன்

(இன்னு.....)

## சரணம்

இத்தனை நாள் நான் பட்டதுபோதுமம்மா
இனியாகிலும் நீ தயைபுரிவாய் அம்மா
அத்தன் ஆனந்தன் தில்லை அம்பலவாணனுடன்
நர்த்தனம் செய்பவளே நாயகி நாராயணி

(இன்னு.....)

*****

## "சங்கரிஜய சாமுண்டி"

ராகம் -மத்தியமாவதி | தாளம் -ஆதி

### பல்லவி

சங்கரிஜய சாமுண்டி
சங்கடந்தவிர்த் தெம்மை ஆதரி

### அனுபல்லவி

மங்களமாய் என்றும் மயூரபதியினில்
வந்துறையும் எங்கள் ஜெய பத்ரகாளி

(சங்க.....)

### சரணம்

கல்யாணகுணசாலி நீ காத்யாயினி ஜய காருணி
வித்யா ரூபிண்யை வீணாதார்யை
விமலேஸ்வரி ஜெய விஜயாயை
கௌமாரிபால சந்ர சேகரி
கற்பக நாயகி கடைக்கண் பார்த்தருள்

(சங்க.....)

*****

# “மயூரபதியைக்கண்டேன்”

ராகம் - கரகரப்பிரியா                    தாளம் - ஆதி

**பல்லவி**

மயூரபதியைக் கண்டேன் - மன
மாயைகளை வென்றேன் - திரு

(மயூர .....)

**அனுபல்லவி**

தயைநிறைந்த பரி பூரணிபத்ரகாளி
தானே வீற்றிருந்து தண்ணருள்புரிந்திடும்

(மயூர .....)

**சரணம்**

புன்னகை பொங்கிடும் பொன்முகம் காட்டுவாள்
பூந்தளிர்க் கையினால் பைந்தமிழ் ஊட்டுவாள்
அன்னையே அகிலாண்ட நாயகியே
அன்புமலர் கொண்டுன் பொற்பதம் வணங்கினேன்

(மயூர .....)

*****

# "மயூரபதியில் அமர்ந்த நாயகியே"

ராகம் - கல்யாணி                                        தாளம் - ஆதி

### பல்லவி

மயூரபதியில் அமர்ந்த நாயகியே
மகா பத்ரகாளி தேவி தயாபரியே

(மயூர .....)

### அனுபல்லவி

தயைபுரிய இன்னும் தாமதம் ஏனம்மா
தமியேன் பிழை பொறுத்துன் கடைக்கண் பாரம்மா

(மயூர .....)

### சரணம்

பெற்றவள் தன்பிள்ளை செய்திடும் தவறினை
மற்றவர் அறியாமல் நல்லறிவூட்டிடுவாள்
கற்றவர் தொழுதேத்தும் கருணைக்கடலே நீ
சற்றேனும் இரங்கி எனக் குபதேசம் செய்யம்மா

(மயூர .....)

மாய உலகில் நான் மதிகெட்டு அலைவதை
தாயே இன்னமும் நீ பார்த்திருப்பது சரியோ
தூய உணர்வுதந்து உன்திருப்புகழை நான்
வாயாரப்பாடும் வரமெனக் கருளம்மா

(மயூர .....)

*****



# "நாமாவளிகள்"
## "ஸ்ரீகணநாதா ஜெயகணநாதா"

ராகம் - அமீர்கல்யாணி    தாளம் - ஆதி

ஸ்ரீகணநாதா ஜெயகணநாதா
மயூரபதியிலுறை கஜானனா
ஸ்ரீகணநாதா ஜெயகணநாதா
மயூரபதியிலுறை கஜானனா

(ஸ்ரீகண.....)

மகாகணபதே மங்களமூர்த்தி
வந்தருள்புரிவாய் க்ருபாநிதி
விக்னவினாயக கஜானனா
சித்திவினாயக கஜானனா

(ஸ்ரீகண.....)

மூஷிகவாகன கஜானனா
மோதககஸ்தா கஜானனா
கௌரிதனயா கஜானனா
கஜமுகவரதா கஜானனா

(ஸ்ரீகண.....)

ஈஸ்வரபுத்ரா கஜானனா
முக்திப்ரதாயக கஜானனா
சாமரகர்ணா கஜானனா
விளம்பித சூத்ரா கஜானனா

(ஸ்ரீகண.....

*****)

# "மயூரபதியில் உறைபவளே"

ராகம் - ஜோன்புரி தாளம் - திஸ்ரரகம்

மயூரபதியில் உறைபவளே - ஓம் சிவசக்தி
மங்கள சிவநாயகியே - ஓம் சிவசக்தி
அம்மணி ஜெகதாம்பிகையே - ஓம் சிவசக்தி
தண்மயிசிவசாம்பவியே - ஓம் சிவசக்தி

(மயூர .....)

சுத்தசக்தி சுடர்க்கொடி - ஓம் சிவசக்தி
சுந்தரிபுரந்தரி - ஓம் சிவசக்தி
வித்தகி ஸ்ரீ நர்த்தகி - ஓம் சிவசக்தி
விஜயபாபவினாசினி - ஓம் சிவசக்தி

(மயூர .....)

சந்ரமௌலி சரஸ்வதி - ஓம் சிவசக்தி
சாரதா ஜெயபாரதி - ஓம் சிவசக்தி
சுந்தராங்கி சோபிதா - ஓம் சிவசக்தி
சாம்பவி ஏகாம்பரி - ஓம் சிவசக்தி

(மயூர .....)

குண்டலி சந்ரமண்டலி - ஓம் சிவசக்தி
கோமளி இன்ப ஸ்யாமளி - ஓம் சிவசக்தி
சண்டிகாஶ்ரீ சாமுண்டி - ஓம் சிவசக்தி
திவ்யராஜ ராஜேஸ்வரி - ஓம் சிவசக்தி

(மயூர .....)

பத்ரகாளி தயாபரி - ஓம் சிவசக்தி
வித்வபூஷணி கௌரி - ஓம் சிவசக்தி
சிம்மவாகினி பைரவி - ஓம் சிவசக்தி
சித்தியெல்லாம் தருபவளே - ஓம் சிவசக்தி

(மயூர .....)

நித்யவாணி நிரஞ்சனி - ஓம் சிவசக்தி
செஞ்சடாதரி மலைநீலி - ஓம் சிவசக்தி
ஜோதிவேணி சுமங்கலி - ஓம் சிவசக்தி
சொக்கநாதர் பங்கிலுறையும் - ஓம் சிவசக்தி

(மயூர .....)

சிங்கத்தின் மீதிருப்பாய் - ஓம் சிவசக்தி
தீவினைகள் தீர்த்திடவே - ஓம் சிவசக்தி
செங்கமல மீதிருப்பாய் - ஓம் சிவசக்தி
செல்வமெல்லாம் தந்திடவே - ஓம் சிவசக்தி

(மயூர .....)

வெண்கமல மீதிருப்பாய் - ஓம் சிவசக்தி
மேவுகலை தந்திடவே - ஓம் சிவசக்தி
உன்பாதம் சரணமம்மா - ஓம் சிவசக்தி
உனைமறவா வரம்தருவாய் - ஓம் சிவசக்தி

(மயூர .....)

*****

## "மங்கள வடிவான சுந்தரி"

ராகம் - மாண்டு　　　　　　　　　　தாளம் - ஆதி

மங்களவடிவான சுந்தரி ஒய்யாரி
மயூரபதியில் வாழும் தேவி பத்ரகாளி
(மங்க.....)

ஓங்காரமானவளே உலகமெல்லாம் நிறைந்தவளே
பாங்கான கலை தருவாய் பவவினைகள் தீர்த்திடுவாய்
(மங்க.....)

ஜெயஜெயசங்கரி துக்கநிவாரணி
சக்தியெனும் மாயே சங்கடம் தீர்ப்பவளே
(மங்க.....)

ஓம் மகேஸ்வரியே ஓம் ஜெகதம்பா
ஓம் உமாதேவ்யையே ஓம் கல்யாண்யை
(மங்க.....)

ஓம்மகாவித்யாயை த்ரிபுரி சுந்தர்யை
ஓம்தயாகர்யை அபயப்ரதாயை
(மங்க.....)

திரிபுரசுந்தர்யை ராஜராஜேஸ்வர்யை
ஓம் அஷராயை நம ஓம் வீணா பாணிநம
(மங்க.....)

வாக்தேவ தாயை நம சுக்லரூபாயை தம
சுந்தரி சவுந்தரி நித்ய கல்யாணி நம
(மங்க.....)

வரஹஸ்தாநம ஞானமுக்ரா நம
கானலோலுபா நம வைகரீருபா நம
(மங்க.....)

*****

# "மயூரபதியில் வாழும் மகாராணி"

ராகம் - நாதநாமக்கிரியை தாளம் - சதுஸ்ரஏகம்

மயூரபதியில் வாழும் மகாராணி அம்மா
மனோன்மணிக்ருபாகரி மகாராணி அம்மா

(மயூர .....)

உமையவளே சிவ மகாராணி - இந்த
உலகை ஆளும் மகாராணி
சுந்தரி சாம்பவி மகாராணி
சந்ரகலாதரி மகாராணி

(மயூர .....)

தில்லையில் நடமிடும் மகாராணி - எம்
தீவினை தீர்த்திடும் மகாராணி
வல்லமை தந்திடும் மகாராணி - நல்
வாழ்வருள்வாய் சிவ மகாராணி

(மயூர .....)

சிவசிவசங்கரி மகாராணி - எம்
பவவினை தீர்க்கும் மகாராணி
சின்மய சொரூபி மகாராணி
சித்தியெல்லாம் தரும் மகாராணி

(மயூர .....)

ஜெயபத்ரகாளி மகாராணி
கருணாசாகரி மகாராணி
வீரவுறுதி தரும் மகாராணி
வெற்றி மிகத் தரும் மகாராணி

(மயூர .....)

கங்காதரி சிவ மகாராணி
காத்யாயினிசிவ மகாராணி
எங்கும் நிறைந்த மகாராணி
ஏகாந்தரூபி மகாராணி

(மயூர .....)

காஞ்சி காமாட்சி மகாராணி
மதுரை மீனாட்சி மகாராணி
ஜெயசிவசங்கரி மகாராணி
சிவனார் மகிழும் மகாராணி

(மயூர .....)

மங்களரூபிணி மகாராணி
மதியணிசூலினி மகாராணி
சங்கடம் நீங்கிட மகாராணி
சடுதியில் வந்தருள் மகாராணி

(மயூர .....)

பஞ்சமிபைரவி மகாராணி
பர்வதபுத்திரி மகாராணி
ஜெயகாயத்திரி மகாராணி
துக்கநிவாரணி மகாராணி

(மயூர .....)

*****

## "மயூரபதி வாழுமெங்கள் மகமாயி"

ராகம் - பீம்பிளாஸ் தாளம் - ஆதி

மயூரபதி வாழுமெங்கள்
மகமாயி பத்திரகாளி - அம்மா

(மயூர.....)

கயிலைநாயகி கல்யாணி உன்னைக்
கைதொழுதோம் கண்பாரம்மா அம்மா

(மயூர.....)

சங்கரநாயகி சாமுண்டி உன்னைச்
சரணடைந்தோம் தாயே வா அம்மா - அம்மா

(மயூர.....)

தேவிமீனாட்சி விசாலாட்சி - உன்
திருவுள்ளமிரங்கி வா அம்மா - அம்மா

(மயூர.....)

செல்வக்குமரனை ஈன்றவளே - சிவ
தேவி உமா இங்கு வா அம்மா - அம்மா

(மயூர.....)

ஸ்ரீநாராயணி ஸ்ரீதேவி அம்மா
ஸ்ரீகரிசோதரி ஸ்ரீகௌரி அம்மா

(மயூர.....)

சென்மவினை தீர்க்கும் திருமருந்தே
உன்மனமிரங்கி வா அம்மா - அம்மா

(மயூர.....)

பாதம் பணிந்தோம் பகவதியே
பரிவொடு எம்மைப்பாரம்மா - அம்மா

(மயூர.....)

எம்மனத்தில் என்றும் குடிகொண்டு
எமக்குபதேசம் செய்யம்மா - அம்மா

(மயூர.....)

உன்மலர்ப்பாதம் சரணமம்மா
உனைமறவா வரம்தா அம்மா - அம்மா

(மயூர.....)

*****

# "மயூரபதியில் வாழும் மகாபத்ரகாளி"

ராகம் - சண்முகப்பிரியா　　　　　　　　தாளம் - ஆதி

**பல்லவி**

மயூரபதியில் வாழும் மகாபத்ரகாளி
மனமிரங்கி என்னை ஆண்டருள்புரி
(மயூர .....)

**அனுபல்லவி**

கயிலைக்ருபாகரி காமாட்சி
கற்பககசுந்தரி உன் பொற்பாதங்கள் பிடித்தேன்
(மயூர .....)

**சரணம்**

எதுபோனாலும் போகட்டும்தாயே உன்
நாமபஜனை ஒன்றே போதுமம்மா எனக்கு
மதுசூதனன்தன் சோதரி - வீர
மகிஷாசுர மர்த்தினி அம்மா
(மயூர .....)

*****

# "கண்டேன் கலிதீர்ந்தேன்"

ராகம் - கல்யாணி தாளம் -ஆதி

## பல்லவி

கண்டேன் கலிதீர்ந்தேன் -நான்
மயூரபதியைக்................

(கண்.....)

## அனுபல்லவி

வேண்டும் அடியார் தம் வெவ்வினை தீர்த்தருளும்
கண்கண்ட தெய்வமாம் காளியின் சந்நிதியைக்

(கண்.....)

## சரணம்

ஞாயிறைக் கண்ட தாமரை போலே
ஞானியைக் கண்ட ஞானியைப்போலே
வான்முகில் கண்ட மயிலினைப்போலே
தாய் வரக்கண்ட சேயினைப்போலே

(கண்.....)

*****

ஸாரமா ரூபகம்

ஸ்ரி, ஸ்த ப பதப மகரி ; ப மகரி
மகரிஸ ஸரிஸத

ஸரி, ஸத ப தஸரி மகரி - ஸரிஸப
மகரி பமதபத - ஸ்ரி, ஸ்தப
தஸ்ரி மக்ரீ - ஸ்ரீமக்ரிஸ் ஸ்ரி
ஸ்தபம ஸ்ரி, த ஸ்ரீ மக் ஸ்ரீ
ஸ்த ஸ்தபமகரீ தஸரீமபத
ஸ்ரீ ஸ்தஸ்த ஸ்ரிஸ்தப ரிஸ்தப
மகஸரீமபத

காவடி தோளிற் றாங்கி - கலமுறு பாலை ஏந்தி
தேவியைத் துதிக்கும் நாளோ - திருநிறை ஆடிப் பூரம்
ஆவியிற் கலந்தே நிற்கும் - அன்னைதேர் அடுத்த நாளாம்
ஆவல்கொள் விழாவைக் காண - அனைவரும் வருவீ ரன்றோ?



Sri Bhathrakali Amman Devasthanam,
17, A-Mayura Place, Havelock Road,
Colombo - 6. Shri Lanka. T'Phone: 500840